# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

(*2012.11.19* ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயம் (திருத்தம்)

**2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

வெளிவிவகார அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

### சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) மனிதாபிமான ஏதுக்களின்மீது கொடுக்கப்பட்ட விலக்களிப்பை அகற்றுவதுமாகும் ; அத்துடன்

(ஆ) பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கரவாதி ஒழுங்கமைப்புகளுக்குப் பொருள்வகையான ஆதாரத்தை அல்லது மூலவளங்களை வழங்குதல் என்ற தவறு தொடர்பில் தண்டனையொன்றை அறிமுகப்படுத்துவதுமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், தெளிவுபடுத்துகையின் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஊ என்னும் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதுமாகும்.

# பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயம் (திருத்தம்)

ச.வ.ஓ. 30/2012

## 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (2அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(2அ) எவரேனும் பயங்கரவாதிக்கு, பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கரவாத ஒழுங்கமைப்புக்குப் பொருள் வகையான ஆதரவை அல்லது மூலவளங்களை நேரடியான அல்லது நேரடியாகவல்லாத வழிவகைகள் மூலம் சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் வழங்குகின்ற அல்லது வழங்குவதற்குச் சதிசெய்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். " ;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில் "ஓராம் பந்தியில் அல்லது (2) ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் அல்லது (2அ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்"; அத்துடன்

2-PL 006718 -225 (2012/11)

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில், "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, (2) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது (2அ) என்னும் உட்பிரிவின்கீழான" என்னும் சொற்களையும் எண் களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஊ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் "நீதிமன்றத்தால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியொன்றுக்குள் அத்தகைய பெறுமதியான குற்றப்பணமொன்றைச் செலுத்துமாறு அவருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய பெறுமதியைக் குற்றப்பண மொன்றாகச் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில், "3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,"3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, (2) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது (2அ) என்னும் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்